# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2021 ஒத்தோபர் 11 |

**தகவல் தொடர் குறிப்பு**

## 2022இல் முதிர்ச்சியடைகின்ற இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் விலைக் கழிவுகளில் கோரப்பட்ட போதிலும் கொள்வனவுக்காக போதியளவில் கிடைக்கப்பெறவில்லை

இலங்கை மத்திய வங்கியினால் 2021.10.01 அன்று முன்வைக்கப்பட்ட "பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாத வழிகாட்டல்" இன் பிரகாரம் நாட்டிற்கான பன்னாட்டு முறி முதலீட்டுத் தொகையானது அடுத்துவருகின்ற மூன்று வருடங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 10 சதவீதத்திற்குப் படிப்படியாகக் குறைக்கப்படவுள்ளது. இக்குறிக்கோளுக்கமைவாக, 2021 செத்தெம்பர் காலப்பகுதியில் எதிர்வருகின்ற 2022 இன் சனவரி மற்றும் யூலை நாட்டிற்கான பன்னாட்டு முறி முதிர்ச்சிகளின் வர்த்தகப்படுத்தலில் கழிவுசெய்யப்பட்ட விலைகளை அவதானத்திற்கொண்டு, பல எண்ணிக்கையான பன்னாட்டு வங்கிகளுடனும் முதலீட்டு வங்கிகளுடனுமான ஆலோசனையுடன் மீள்கொள்வனவு நடைமுறையொன்றினை நிறைவேற்றும் சாத்தியப்பாட்டினை மத்திய வங்கி கண்டறிந்தது.

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநிற்கின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினதும் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீத அசைவுகளை கீழேயுள்ள வரைபடம் எடுத்துக்காட்டுக்கின்றது. வரைபடத்திற்கமைய 2021.09.24 அன்று 69 சதவீத விளைவு மட்டங்களில் உச்சத்தை எட்டியிருந்த 2022 இன் சனவரி நாட்டிற்கான பன்னாட்டு முறி முதிர்ச்சி, 2021.10.01 அன்று 47 சதவீத மட்டங்களுக்குப் படிப்படியாகக் குறைவடைந்து தற்போது 40 சதவீத மட்டங்களில் வர்த்தகப்படுத்தப்படுகின்றது (விளைவு அசைவுகளைக் காண்பிப்பதற்கு ↗ மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது).

**வரைபடம் 01 – 2021 காலப்பகுதியில் இதுவரையிலும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களின் அசைவு**




மூலம்: புளூம்பேர்க்

எவ்வாறிருப்பினும், சந்தைத் தகவல்களின் அடிப்படையில், 2021 செத்தெம்பரின் பிந்திய காலப்பகுதியில் நிலவிய கழிவுசெய்யப்பட்ட விலைகளில் 2022 சனவரி நாட்டிற்கான பன்னாட்டு முறி முதிர்ச்சிகளை விற்பனை செய்வதற்கு முறி வைத்திருப்பவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான ஆர்வம் எதுவும் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. இதனூடாக வழங்குநருக்கான நியாயமான செலவு நன்மையொன்றினை அனுபவித்துக்கொள்ளும் பொருட்டு குறிப்பிடத்தக்க அளவினை மீள்கொள்வனவு செய்கின்றமை சாத்தியமற்றதாக இருக்குமென்பது குறித்துக்காட்டப்படுகின்றது. வெளிநிற்கின்ற 2022 சனவரி நாட்டிற்கான பன்னாட்டு முறி முதிர்ச்சியில் 5 சதவீதம் கூட கோரப்பட்ட கழிவுசெய்யப்பட்ட விலைகளில் விற்பனைக்காகக் கிடைக்கப்பெறவில்லை என்பதையும் விசாரணைகள் வெளிப்படுத்தின.

ஒட்டுமொத்தமாக, எத்தனிக்கப்பட்ட மீள்கொள்வனவு முன்முயற்சி பற்றிய மத்திய வங்கியின் அவதானிப்புகள் பின்வருமாறு:

- 2021 செத்தெம்பரின் பிந்திய பகுதியை நோக்கிய கழிவுசெய்யப்பட்ட விலைகளில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் முதலீட்டாளர்களினால் விற்பனை செய்யக்கூடிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் அளவு, மிகவும் சொற்பமானதாகும். இதனால், கிடைக்கபெறுகின்ற மிகவும் சிறிய அளவினை கொள்வனவு செய்வதற்கான வழங்குநரின் முயற்சியானது முதிர்ச்சிக்காக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வைத்திருப்பதற்கு விரும்புகின்ற பாரிய எண்ணிக்கையிலான நாட்டிற்கான பன்னாட்டு முறி வைத்திருப்போரிடம் பெரியளவானதானவிருக்காது.

- விலைகள், ஒத்த விலைகளாக அல்லது ஒத்த விலைகளுக்கு சமீபமாக இல்லாவிடின் மேற்குறித்த இலங்கை அரசாங்கத்தின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் உரித்தினைக் கைவிடுவதற்கு பாரியளவிலான நாட்டிற்கான பன்னாட்டு முறி உடமையாளர்களில் பெரும்பான்மையானோர் தயாராகவில்லை என்பது தெளிவாகின்றது. இதனால், மீளக்கொள்வனவு செய்யும் முன்முயற்சியும் வழங்குநருக்கு ஏதேனும் குறிப்பிடத்தக்க விலை அல்லது கூப்பன் நன்மையினைத் தோற்றுவிக்காது.

- மேலே குறிப்பிட்ட முதலீட்டாளர் எண்ணப்பாங்கானது கடப்பாடுகளை வழங்குநர் (இலங்கை அரசாங்கம்) நிறைவேற்றுவதனையும் படுகடனைத் தீப்பனவுசெய்வதில் அதன் கறைபடியாத பதிவினைப் பேணுகின்ற அதன் இயலுமை தொடர்பிலும் நாட்டிற்கான பன்னாட்டு முறி வைத்திருப்போரின் தொடர்ச்சியான நம்பிக்கையினை எடுத்துக்காட்டுகின்றது. எனவே, 2022இல் பாதிக்கப்படத்தக்கதன்மை நிகழக்கூடும் என்பது பற்றி சில தரப்பினரால் எழுப்பப்பட்ட கரிசனைகள் இம்முதலீட்டாளர் எண்ணப்பாங்கில் பிரதிபலிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

- மேற்குறித்த இலங்கை அரசாங்கம் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வைத்திருக்க வேண்டும் என்பதே தொடர்ச்சியான முதலீட்டாளர் விருப்பமாக காணப்படுகின்றது. எனவே, இலங்கை அரசாங்கத்தின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வைத்திருப்பதற்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வைத்திருப்பவர்களின் ஏற்பினைக் கருத்திற்கொள்கையில் 2022 நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மீளக்கொள்வனவு செய்வதற்கான மத்திய வங்கியின் முன்முயற்சியினை முன்னெடுப்பது வெற்றிகரமான பெறுபேற்றை விளைவிக்காது.